**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.8/2021**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குகன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 39 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

24.02.2026

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. தாந்தோணிபிள்ளையை என் அம்மா தத்தெடுத்ததற்கான நீதிமன்றம் மூலமோ அல்லது வேறு வகையான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். தாந்தோணிபிள்ளைக்கு வாரிசு சான்றிதழ் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. தாந்தோணிபிள்ளை கன்னியம்மாளுக்கு ஏதாவது பதிவு செய்த ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. கன்னியம்மாள் பெயரில் பட்டா எதுவும் வந்துள்ளதா என்றால் இல்லை. எவ்வித அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் கன்னியம்மாள் 29.04.2004ல் பரிமளாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. 29.04.2004ல் பரிமளா பெயரில் உள்ள ஆவணம் செல்லத்தக்கது அல்ல மற்றும் அது செயல்முறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. வந்துவிட்டது.

5. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் **"சர்வே எண்.11/7 விஸ்தீரணம் 16 செண்ட் சர்வே எண்.11/8 விஸ்தீரணம் 16 செண்ட் நிலத்தை முரளி என்பவருக்கு 14.10.2020ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்து விட்டார்"** என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதற்காக மேற்படி விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் மேற்படி

சொத்தை வாங்கியதால்தான் செந்தில், ராஜகோபால் அடித்து குற்றவியல் வழக்கு வந்தது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் இந்த வழக்கில் உள்ள சாட்சியத்தை குற்றவியல் வழக்கில் பயன்படுத்தலாம் என்று மேற்படி விவரத்தை தேவையற்கு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என் தாயார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் தாயார் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)